சட்டம் ஒழுங்கு சீர்கேடு : பெண்கள் - குழந்தைகள் பாதுகாப்பின்மை மற்றும் விலைவாசி உயர்வைக் கண்டித்து

தி.மு.க. மகளிர் அணி சார்பில் மாவட்டத் தலைநகரங்களில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

அக். 31 அன்று நடைபெறுகிறது!

சென்னை, அக். 27 - சட்டம் ஒழுங்கு சீர்கேடு - பெண்கள் - குழந்தைகள் பாதுகாப்பின்மை மற்றும் விலைவாசி உயர்வைக் கண்டித்து, தி.மு.க. மகளிர் அணி சார்பில் அக். 31 அன்று மாவட்டத் தலைநகரங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இதுகுறித்து தி.மு.க. தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

தமிழகத்தில் கொலை, கொள்ளை, போதைப் பொருள் விற்பனை ஆகியவை அதிகரித்து சட்டம் ஒழுங்கு பெரியளவில் சீர்கேட்டு இருப்பதோடு, பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் குழந்தைகள் கடத்தல் ஆகியவை மிகப்பெரிய அளவில் அதிகரித்து தமிழகத்தை பாதுகாப்பற்ற மாநிலமாக இந்த ஆட்சி கொண்டு வந்திருக்கிறது.

இதுபோன்ற குற்றச் செயல்களில் ஆளும் த.வெ.க.வினரே பெரிய அளவில் ஈடுபட்டிருப்பதாக செய்திகள் வெளிவருகின்றன.

இந்த அரசு சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்கும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுப்பதற்கும், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்துவதற்கும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள வில்லை.

ஒரு பாதுகாப்பற்ற மாநிலமாக தமிழகத்தை படுகுழியில் தள்ளி உள்ள த.வெ.க. அரசைக் கண்டித்து தி.மு.க. மகளிர் அணியின் சார்பில் வருகிற 31.10.2026 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இவ்வாறு தி.மு.க. தலைமைக் கழகம் தெரிவித்துள்ளது.

முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கைது;

தடைகளை உடைத்து முன்னேறியது, தி.மு.க. வின் வரலாறு!



முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு 'ட்விட்டர்' பதிவு!

சென்னை, அக். 27- முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கைது செய்யப்பட்டதை அடுத்து 'ட்விட்டர்' பதிவிட்டுள்ள முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு, "தடைகளை உடைத்து முன்னேறிய வரலாறுதான் தி.மு.க.வின் வரலாறு!" என்று குறிப்பிட்டுள்ளார்.

அவரது பதிவு வருமாறு:

முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் கைது செய்யப்பட்டிருப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

இந்த அரசின் மீது மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் கோபத்தை மடைமாற்றுவதற்காகவே இந்தக் கைது நடைபெற்றிருப்பதாகக் கருதவேண்டியுள்ளது.

அடக்குமுறையினால் திராவிட முன்னேற்றக் கழகத்தை முடக்கவும் முடியாது. தடைகளை உடைத்து முன்னேறிய வரலாறுதான் திமுகவின் வரலாறு!

இவ்வாறு தமது 'ட்விட்டர்' பதிவில் தங்கம் தென்னரசு குறிப்பிட்டுள்ளார்.

சென்னை மக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு - அடிக்கடி செயலிழந்து போகும்

வானிலை ரேடாரை சரிசெய்ய அவசர நடவடிக்கை தேவை!

பிரதமர் மோடிக்கு தயாநிதி மாறன் எம்.பி. அவசரக் கடிதம்!

சென்னை, அக்.27 - அடிக்கடி செயலிழந்துப்போகும் சென்னையின் 'எஸ்பேண்ட் டாப்ளர்' வானிலை ரேடாரை துரித கதியில் சரிசெய்யக் கோரி, கழகத் தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி கழக நாடாளுமன்றக் குழு துணைத் தலைவரும், கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளருமான தயாநிதி மாறன் எம்.பி. ஒன்றிய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து பிரதமர் மோடி அவர்களுக்கு எழுதியுள்ள அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:

சென்னை துறைமுக அறக்கட்டளை நூற்றாண்டு கட்டிடத்தில் நிறுவப்பட்டுள்ள 'எஸ் பேண்ட் டாப்ளர்' வானிலை ரேடார் மீண்டும் செயலிழந்துள்ள விவகாரம் குறித்து உங்களுக்கு மீண்டும் கடிதம் எழுதுகிறேன். இந்த ரேடார் மீண்டும் செயல்பாடின்றிப் போயிருப்பது, மோசமான வானிலை முன்னறிவிப்புகள் வரவிருக்கும் சூழலில், சென்னையின் வானிலை கண்காணிப்பு மற்றும் பேரிடர் முன்னெச்சரிக்கை திறன்கள் குறித்த கவலையை தீவிரமாக்கியுள்ளது.

இது குறித்து, 2-12-2020 மற்றும் 12-11-2021 ஆகிய தேதிகளில் கடிதங்கள் வாயிலாக உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளேன்.

மேலும் 08-12-2021, 16-03-2022, 20-07-2022, 07-08-2024 ஆகிய தேதிகளில் மக்களவையிலும் நான் கேள்வி எழுப்பியுள்ளேன்.

எனது தொடர்ச்சியான முறையீடுகளே இந்தச் சிக்கலின் தீவிரத்தையும், அது நீண்டகாலமாக நீடித்து வருவதையும் உணர்த்துகின்றன. நாடாளுமன்றத்தில் அளிக்கப்பட்ட பதில்களில், புவி அறிவியல் அமைச்சகம் (Ministry of Earth Sciences), இந்த ரேடாரில் ஏற்பட்டுள்ள இயந்திரக் கோளாறுகள், உதிரிபாகங்களைப் பெறுவதில்



உள்ள சிரமங்கள் மற்றும் 24 மணிநேரமும் தடையின்றிச் செயல்படுவதில் உள்ள தடைகள் ஆகியவற்றை ஒப்புக்கொண்டிருந்தது. தற்போது மீண்டும் இந்த ரேடார் செயலிழந்துள்ளதிலிருந்து நம்பகமான மற்றும் தடையற்ற செயல்பாட்டை உறுதி செய்வதற்கான அடிப்படைச் சிக்கல் இன்னும் முறையாகத் தீர்க்கப்படவில்லை என்பதையே காட்டுகிறது.

சென்னை மாநகரம், கனமழை, நகர்ப்புற வெள்ளம் மற்றும் சூறாவளி போன்ற வானிலை நிகழ்வுகளால் அதிகம் பாதிக்கப்படக்கூடிய ஒரு பகுதியாகும். எஸ்Band ரேடார் என்பது இப்பகுதியின் வானிலை கண்காணிப்பு வலையமைப்பில் ஒரு முக்கியமான அங்கமாகும். இது வானிலை அமைப்புகளின் நகர்வு மற்றும் தீவிரத் தன்மை குறித்த மிக முக்கியமான தகவல்களை வழங்குகிறது. செயற்கைக்கோள் கண்காணிப்புகள் மற்றும் எண்முறை வானிலை மாதிரிகள் (numerical weather models) பயனுள்ளவையாக இருந்தாலும், நம்பகமான, நிகழ்நேர ரேடார் கண்காணிப்பின் தேவையை அவை ஈடுசெய்ய முடியாது.

பொதுப் பாதுகாப்பிற்கான ஒரு முக்கியமான உள்கட்டமைப்பு வசதி, பல ஆண்டுகளாக விடுக்கப்பட்ட கோரிக்கைகள், நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விகள் மற்றும் பழுதுபார்ப்பு அல்லது மாற்றீடு குறித்த வாக்குறுதிகள் இருந்தபோதிலும், மீண்டும் மீண்டும் செயலிழந்து போவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். ஒவ்வொரு பருவமழைக் காலத்திலும், வானிலை கண்காணிப்பு உள்கட்டமைப்பில் ஏற்படும் இத்தகைய தொடர்ச்சியான தடங்கல்களைச் சென்னை மக்கள் எதிர்கொள்ள வேண்டிய சூழல் இருக்கக்கூடாது.

எனவே, இந்த விவகாரத்தில் நீங்கள் உடனடியாக தலையிட்டு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை உறுதி செய்யக் கோருகிறேன் :

1. உடனடி சீரமைப்பு: புவி அறிவியல் அமைச்சகம் (Ministry of Earth Sciences) மற்றும் இந்திய வானிலை ஆய்வுத் துறை (IMD) ஆகியவற்றிற்கு உத்தரவிட்டு, தற்போதைய செயலிழப்பிற்கான துல்லியமான தொழில்நுட்பக் காரணத்தைக் கண்டறிந்து, எவ்விதத் தாமதமுமின்றி ரேடாரை மீண்டும் முழுமையாகச் செயல்பாட்டிற்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. காலக்கெடுவுடன் கூடிய மாற்றீடு: புதிய S-Band டாப்ளர் வானிலை ரேடாரை நிறுவுவதற்கான காலக்கெடுவை நிர்ணயித்து, அதை பொது வெளியில் அறிவிக்க வேண்டும். இதில் ரேடாரை வாங்கும் விவரம், நிறுவுதல், சோதனை செய்தல் மற்றும் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் ஆகிய நிலைகள் குறித்த விவரங்கள் இடம் பெற வேண்டும்.

3. நம்பகமான இடைக்கால ஏற்பாடு: புதிய ரேடார் பயன்பாட்டிற்கு வரும் வரை, சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள கடலோர மாவட்டங்களுக்குத் தேவையான மாற்று ரேடார் கண்காணிப்பு வசதியை உறுதி செய்ய வேண்டும். முக்கியமான வானிலை கண்காணிப்புகளில் எந்தவிதத் தடங்கலும் ஏற்படாதவாறு தெளிவான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

4. பொறுப்புக்கூறல் மற்றும் பராமரிப்பு: மீண்டும் மீண்டும் ஏற்படும் செயலிழப்புகள், பராமரிப்பு ஏற்பாடுகளின் தரம் மற்றும் எனது முந்தைய கோரிக்கைகள் மற்றும் நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்குப் பிறகு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஒரு தொழில்நுட்ப மறுஆய்வை மேற்கொள்ள வேண்டும்.

5. எழுத்துப்பூர்வ நிலை அறிக்கை: ரேடாரின் தற்போதைய செயல்பாட்டு நிலை, சமீபத்திய செயலிழப்பிற்கான காரணங்கள், மேற்கொள்ளப்பட்டு வரும் சீரமைப்பு நடவடிக்கைகள் மற்றும் தடையற்ற செயல்பாட்டை அடைவதற்கான காலக்கெடு குறித்த விரிவான அறிக்கையை, சம்பந்தப்பட்ட அமைச்சகம் வழங்க உத்தரவிட வேண்டும்.

இந்த விஷயத்தை நான் மீண்டும் மீண்டும் எழுப்புவதற்குக் காரணம், போதிய வானிலை கண்காணிப்பு இல்லாதது சென்னை மற்றும் அண்டை மாவட்ட மக்களின் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்திற்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என்பதால் தான். மீண்டும் மீண்டும் பழுதுபார்ப்பதும், அதன் பிறகு மீண்டும் செயலிழப்பதும் ஒரு நீண்டகாலத் தீர்வாக இருக்க முடியாது.

இந்த விவகாரத்தில் நீங்கள் உடனடியாக தலையிட்டு சம்பந்தப்பட்ட அமைச்சகம் ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் பதில் அளிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். சென்னையின் பேரிடர் தயார்நிலை என்பது, பழுதடைந்த உள்கட்டமைப்பை அவ்வப்போது அவசரகால அடிப்படையில் சரிசெய்வதை மட்டும் சார்ந்திருக்கக் கூடாது.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

உத்தரப் பிரதேசத்தில் முறைகேடுகள் அம்பலமானதையொட்டி

அனைத்து எஸ்.ஐ.ஆர். படிவங்களையும் மறுஆய்வு செய்க!

மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி உத்தரவு!

லக்னோ, அக். 27 - உத்தரப் பிரதேசத்தில், வாக்காளர் பட்டியலில் முறைகேடுகள் அம்பலமானதைத் தொடர்ந்து, கணினி ஆப்பரேட்டர்கள் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து எஸ்.ஐ.ஆர். படிவடிங்களையும் மறுஆய்வு செய்ய அம்மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி உத்தரவிட்டுள்ளார்.

உத்தரப் பிரதேச மாநிலம் பிலிபித் சதர் தொகுதியில் முறையான விண்ணப்பப் படிவங்கள் அல்லது ஆதார ஆவணங்கள் ஏதுமின்றி 10 ஆயிரத்து 470 திருத்தங்கள் அங்கீகரிக்கப்பட்டது விசாரணையில் அம்பலமானது. இது தொடர்பாக இரண்டு துணைத் தேர்தல் பதிவு அதிகாரிகள் மற்றும் ஒரு கணினி ஆபரேட்டர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, துறை ரீதியான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன.

இதேபோல், அசம்கர் தொகுதியில் விகாஸ் யாதவ் என்ற ஒரே வாக்காளரின் பெயர் வெவ்வேறு வாக்குச்சாவடிப் பட்டியல்களில் 13 இடங்களில் இடம்பெற்றிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அங்கு பணியாற்றிய 5 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் உள்ளிட்ட 9 தேர்தல் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கடந்த ஏப்ரல் 10 அன்று இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டதிலிருந்து, கணினி ஆப்பரேட்டர்கள் மூலமாக உள்ளீடு செய்யப்பட்ட அனைத்து பெயர் சேர்த்தல், பெயர் நீக்கம் மற்றும் திருத்தங்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து படிவங்கள் அனைத்தையும் மீண்டும் சரிபார்க்க மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு, அம்மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி நவதீப் ரின்வாட உத்தரவிட்டுள்ளார்.

வாக்காளர் பட்டியலில் முறைகேடுகள் மற்றும் போலிப் பதிவுகள் இருப்பதாக சமாஜ்வாதி கட்சி குற்றம் சாட்டியதை அடுத்து இந்த அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தியா முழுவதும் கடந்த 2 ஆண்டுகளில் நடந்த

அனைத்துத் தேர்தல்களையும் ரத்து செய்ய வேண்டும்!

மல்லிகார்ஜுன கார்கே வலியுறுத்தல்!

புதுடெல்லி, அக். 27 - இந்தியா முழுவதும் கடந்த, 2 ஆண்டுகளில் நடந்த அனைத்து தேர்தல்களையும் ரத்து செய்ய வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வலியுறுத்தியுள்ளார்.

பீகார் மாநிலம் பாட்னாவில் காங்கிரஸ் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அக்கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கலந்துகொண்டார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், எஸ்.ஐ.ஆர்., எனப் படும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியில் முறைகேடுகள் நடப்பதாகவும், எதிர்க்கட்சி களின் ஆதரவாளர்கள் பெயர்கள், வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படுகின்றன என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

தமிழ்நாடு, மேற்கு வங்கம், பீஹார், ஹரியானா, மஹாராஷ்டிரா மாநிலங்களில் ஓட்டுத் திருட்டு நடத்தப்பட்டு ஆட்சிகள் கைப்பற்றப்பட்டன என்றும், முறைகேடாக நடைபெறும் அரசுகள் அகற்றப்பட வேண்டும் என்றும் கார்கே வலியுறுத்தினார்.

நாடு முழுதும் நடத்தப்படும் எஸ்.ஐ.ஆர்., பணிகள் நிறுத்தப்பட வேண்டும் என்றும், கடந்த இரண்டு ஆண்டுகளில் நடத்தப்பட்ட அனைத்து சட்டசபை தேர்தல்களையும் ரத்து செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். இனி வரும் காலங்களில், வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்தவும், பொதுமக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்கவும் தேர்தல்களில் ஓட்டுச் சீட்டு முறையையே பின்பற்ற வேண்டும் என்று மல்லிகார்ஜுன கார்கே வலியுறுத்தினார்.

'சென்னை மெட்ரோ ரெயில்' நிறுவனத்திற்கு விருது!

சென்னை, அக். 27 - ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் கடந்த 24 ந்தேதி நகர்ப்புற இயக்கம் குறித்த இந்திய மாநாடு நிறைவு விழா நடைபெற்றது.

விழாவுக்கு மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை மந்திரி மனோகர் லால் கட்டார் தலைமை தாங்கினார்.

அப்போது, சிறந்த பயணிகள் சேவை மற்றும் மன நிறைவு தரும் மெட்ரோ ரெயில் பிரிவின் கீழ் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்திற்கு நகர்ப்புறப் போக்குவரத்தில் சிறந்த சேவைக்கான விருது வழங்கப்பட்டது. விருதை சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் ஆஷிஷ் சாட்டர்ஜி பெற்றுக்கொண்டார்.

பயிற்சி பெற்ற பணியாளர்களுடன் கூடிய மாற்றுத்திற னாளிகளுக்கான எளிமையான பயணம், மேம்படுத்தப்பட்ட பயணிகள் வசதி மற்றும் பெண்களின் பாதுகாப்பு அதிகரிப்பு ஆகிய சிறந்த சேவைகளின் அடிப்படையில் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்திற்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளதாக சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது



கடலூர் மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் கன மழையால் திட்டக்குடி தொகுதியில் உள்ள வெள்ளாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது கடலூர் – பெரம்பலூர் மாவட்டத்தை இணைக்கும் வெள்ளாற்றின் குறுக்கே அரங்கூர் கிராமத்தில் கட்டப்பட்டுவரும் தரைப்பாலத்தை முன்னாள் அமைச்சர் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.கணேசன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மங்களூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் பட்டூர் வீர. அமிர்தலிங்கம் திட்டக்குடி நகர கழக செயலாளர் வி.பி.பி. பரமகுரு அருணா. கோதண்டபாணி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



கோவை மாநகர் மாவட்டம், கோவை தெற்கு சட்டமன்ற தொகுதி, கெம்பட்டி அசோக் நகர் பகுதியில் கனமழை காரணமாக வீடுகள் மற்றும் தெருக்களில் மழைநீர் தேங்கி உள்ளதை மாநகராட்சி பொது சுகாதாரக் குழு தலைவர், மாமன்ற உறுப்பினர் பெ.மாரிச்செல்வன் முன்னிலையில் கோவை மாநகர் மாவட்ட பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் பகுதி கழக பொறுப்பாளர் என்.ஜே.முருகேஷ், வட்டக் கழக பொறுப்பாளர்கள் தங்கவேல், ராஜேஷ் உள்பட பலர் உள்ளனர்.